தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

1987, நவம்பர் *16*, திங்கட்கிழமை

ஐப்பசி *30*, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு *2018*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.''

தக்க இடத்தை அறிந்து பொருந்தியவராய்ச் செயலை நெருங்கிச் செய்வாராயின், அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்துவிடுவார்.

திருவில்லிபுத்தூரில் மார்க்கெட் சந்தையை அரசு கையகப்படுத்தல்

115—(*வினா எண் *2492*) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் 'பென்னிங்டன்' மார்க்கெட் சந்தையை அரசு கையகப்படுத்தும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

(ஆ) நகராட்சி, பேரூராட்சி தனியார் சந்தைகளை கையகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருவில்லிபுத்தூர் 'பென்னிங்டன்' மார்க்கெட்டை நகராட்சி கையகப்படுத்துவது சம்பந்தமாக அந்த மார்க்கெட்டின் கமிட்டி செயலாளரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மீதான தீர்ப்பு நிலுவையில் உள்ளது.

(ஆ) பேரூராட்சி தனியார் சந்தைகளை கையகப்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. ஈரோடு, திருச்சி, காரைக்குடி, அறந்தாங்கி, தேவகோட்டை மற்றும் திருவொற்றியூர் ஆகிய நகராட்சிகளில் தனியார் சந்தைகளை கையகப்படுத்துவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நகராட்சிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் முன்பு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்தது. அப்பொழுது பென்னிங்டன் கலெக்டரால் 1878-ஆம் வருஷம் இந்த மார்க்கெட் உருவாக்கப்பட்டது. லைப்ரரியும் உருவாக்கப்பட்டது. அது தனியாருடைய சொத்து கிடையாது. அரசாங்கத்தின் சொத்து. இப்பொழுதும் மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருக்கிறார். ஆகையால் இதை அரசாங்கத்திற்குக் கொண்டு வருவதற்கும், ஆறு வருடங்களாக ஹைகோர்ட்டில் இருக்கின்ற ஸ்டேயை வெக்கேட் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தமாக தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சில நகராட்சிகளினுடைய தனியார் சந்தைகளைக் கையகப்படுத்துவதாகச் சொன்னார்கள். அது எந்த அளவில் உள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்டதைப் போன்று ஏழு நகராட்சிகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலே அதனுடைய சொத்து மதிப்பீடு, அதை எப்படி அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பது என்பது போன்ற பிரச்சினைகள் சில இடங்களிலே பேசப்பட்டு வருகின்றன ; சில இடங்களில் முடிவுகள் மேற்கொள்ளப்படுவதில் சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம பரிசீலித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, விரைவில் அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரால் நடத்தப்படுகின்ற இந்த வாரச் சந்தைகளில் பெருமளவிற்குத் தனியார் கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு வரக்கூடிய, மக்களால் கொடுக்கப்படுகின்ற பணம் அரசுக்குச் சேர்கின்ற வகையில் தனியார் சந்தைகள் அனைத்தையும் அரசோ அல்லது உள்ளாட்சித் துறையோ அல்லது நகராட்சிகளோ எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்க தனியான ஒரு ஆய்வை நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி அல்லது நகராட்சிகளினுடைய பொறுப்பில் அல்லது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் நடைபெறும் இதுபோன்ற

1987 நவம்பர் 16]

சந்தைகள் பற்றி அந்த நகராட்சி அல்லது பேரூராட்சிகள் ஒரு முடிவு எடுத்து, அதை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அதற்குப் பிறகுதான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பொறுப்புகளிலே இருக்கின்ற பொழுது அரசாங்கம் நேரடியாக தலையிட்டு இப்படிப்பட்ட கொள்கை முடிவுகளை எடுப்பதற்குப் பதிலாக, நிர்வாக நடைமுறையையொட்டி அவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்ட பிறகுதான் அரசாங்கம் அதிலே தலையிடும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சில நகராட்சிகளுடைய சந்தைகளை அரசாங்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்தார்கள். பேரூராட்சிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தீர்மானம் இயற்றி அரசுக்கு அனுப்பியிருக்கின்ற சில நிகழ்வுகளில் அரசு முடிவுகள் எடுக்காமல் இருக்கின்றது. அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அறநிலையத் துறைக்குப் பொறுப்பாக இருக்கின்ற பொழுது, என்னுடைய திருபுவனத்தில் இருக்கின்ற ஒரு சந்தையில் மிகப் பெரிய அளவில் ஊழல் செய்து கொண்டு இருக்கிறார்கள், அதை ஒரு தேவஸ்தானம் நடத்திக்கொண்டிருக்கிறது; அதை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது அதற்குரிய சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு சட்டம் இயற்றலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். நான் கேட்டுக் கொள்வது, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தீர்மானம் இயற்றி அனுப்பியிருக்கின்ற இடங்களிலேயாவது அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து அதை மேற்கொள்வதற்கு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரை இதுவரை பேரூராட்சி நிர்வாகங்கள் தங்களுடைய ஆணைக்குட்பட்ட இடங்களிலே இப்படிப்பட்ட சந்தைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்துக்கள் எதுவும் அரசுக்கு வரவில்லையென்றுதான் குறிப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது போன்று குறிப்பிட்ட பேரூராட்சிகளிலிருந்து அப்படிப்பட்ட கருத்துரை இங்கே அரசுக்கு அனுப்பப்பட்டிருக்குமானால், அதைப்பற்றி அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும். பொதுவாக, இது போன்ற சந்தைகள் நடத்துகின்ற வழக்கங்கள் நீண்ட காலமாகத் தனியாரிடத்திலிருந்து வருகின்றன. ஆனால் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிற நம்முடைய ஜனநாயக ஆட்சி முறையில் நம்முடைய நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகளுக்கு வருமானத்திற்கு வழி தேடிக் கொண்டிக்கிறபொழுது இது போன்ற கட்டணம் வசூலிப்பது போன்று மிகப் பெரிய அளவிலே வருவாய் வருகின்ற துறைகளும் பொது நிர்வாகத்திற்குள்ளே இருப்பதுதான் பொருத்தம். இதை அரசு கூர்ந்து கவனித்துக்

கொண்டிருக்கிறது. தேவையென அந்த நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் தங்களுடைய கருத்துக்களை, முடிவுகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமானால், அதையொட்டி மாநிலம் தழுவிய ஒரு கொள்கை முடிவாக அரசு எடுத்து தீவிரப்படுத்துவதற்கு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலக்கோட்டையில் ஊற்று வேலை

*116—(*வினா எண் 9002)* **திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் கமலாபுரம் ஜம்புதிரியம்மன் ஊற்று வேலை ஆரம்பிக்கப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரமென்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இப்பணி நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஐம்புத்துரைக்கோட்டை ஊராட்சியில் 1985-86ம் நிதியாண்டில் தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, 21-1-1987 அன்று முடிக்கப்பட்டுவிட்டது.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை பொதுப் பணித் துறை ஆய்வுத் திட்டத்தின் கீழ் எடுத்து வேலை செய்வதாக இருந்தது. ஆனால் உள்ளாட்சித் துறையின் மூலமாக குறைந்த தொகையில் வேலை பார்த்து சரியாக முடிக்கப்படாத காரணத்தால், அதை மீண்டும் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் சுமார் 24,000 ரூபாய்க்கு மேல் செலவழித்து அது நிறைவேற்றப்பட்டிருப்பதாகக் குறிப்புகள் இங்கே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தகவலின்படி அதிலே ஏதாவது குறையாக இருக்குமானால், அரசு பரிசீலித்து அதைத் திருத்துவதற்கும் அல்லது பாக்கி இருந்தால் முடிப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்து நன்கு விரிவாக வேலை செய்வதற்குப் பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.